**உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்**

**International Association of Tamil Research**

**(Registered as World Tamil Research Association in India)**

**2017ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் தேதி தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயற்குழுக் கூட்டத்தின் நிகழ்வுக் குறிப்புகள்:**

திட்டமிட்டபடி உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயற்குழுக் கூட்டம், 2017ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் தேதி தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது.

**கூட்டத்தில் பங்குபெற்ற உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | டான் ஸ்ரீ பேராசிரியர் முனைவர் த. மாரிமுத்து | தலைவர் |
| 2. | முனைவர் சர். மு. பொன்னவைக்கோ | துணைத் தலைவர் |
| 3. | முனைவர் உலகநாயகி பழனி | பொதுச் செயலாளர் |
| 4. | திரு. இரா. முத்துகுமாரசாமி | பொருளாளர் |
| 5. | முனைவர் ப. மருதநாயகம் | ஒருங்கிணைப்பாளர் |

**நிகழ்வுப் பொருள்கள்**

1. **வரவேற்பு** - Welcome address by the Vice-President( India)

துணைத்தலைவர் மு. பொன்னவைக்கோ அவர்கள் வருகை தந்திருந்த உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார்.

2. **தலைவர் உரை**- Address by the President, Central Council, IATR :

டான் ஸ்ரீ பேராசிரியர் முனைவர் த.மாரிமுத்து அவர்கள் தமது உரையில். உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 9-ஆவது மாநாட்டிற்குப் பிறகு சென்னையில் 6 செயற்குழுக்கூட்டங்கள் நடைபெற்றதை எடுத்துரைத்தார். உலகத் தமிழ்ராய்ச்சி மன்றம் (IATR) 53 ஆண்டுகள் பழமை உடையது என்பதையும் விளக்கினார். முனைவர் பொன்னவைக்கோ அவர்கள் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றபின்னர் உலகத் தமிழ்ராய்ச்சி மன்றத்திற்கு இணையதளம் அமைத்தல், தனிமனித மற்றும் நிறுவன உறுப்பினர்களைச் சேர்த்தல், தென்னாப்பிரிக்கா, கனடா, லண்டன், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் உலகத் தமிழ்ராய்ச்சி மன்றத்தின் தேசியக்கிளைகளைப் தொடங்குதல் போன்ற பல அரிய பணிகளை ஆற்றியுளார். அவருக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

3. முந்தைய செயற்குழு கூட்டங்களின் கூட்ட நிகழ்வுகளை ஏற்றல் - Approval of the Minutes of previous meetings of EC:

2016-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் தேதி தமிழ் வளர்ச்சிக்கழக அலுவலகத்தில் 5.00 மணிக்கு நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயற்குழுவின் ஆறாவது கூட்டத்தின் நிகழ்வுக் குறிப்புகள் மற்றும் Minutes of the meeting of EC held with Dr,Francis

Muthu in the office of the Tamil Valarchi Kazhgam in Chennai on 2nd Feb 2017 பற்றி உறுப்பினர்களின் கருத்து கேட்கப்பட்டது.

உ.த.ஆ.மன்றத்தின் பத்தாவது மாநாடு சிக்காகோ பலைகலக்கழகம் வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கங்களின் அமைப்புடன் இணைந்து நடத்துவதாக முடிவெடுக்கப்பட்டதையொட்டி உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் புலவர் பிரான்சிசு சவரி முத்து அவர்கள் பொறுப்பேற்று செயல்படுத்துவார் என்று முடிவெடுக்கப்பட்டதும், மலேசிய நாட்டில் கோலாலம்பூரில் 1987-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் தேதி நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் திருத்தி அமைக்கப்பட்ட உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு தேசியக்கிளையும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கு ஆண்டுக் கட்டணமாக US டாலர் 50/= கட்டவேண்டும் என்பதைச் செயற்படுத்தலாம் என முடிவு செய்யப்பட்டதும்,. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திடம் உள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 8-வது மாநாட்டு மலர் விற்பனைத் தொகையாகிய உரு.12.18 இலட்சத்தை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநரிடம் இருந்து பெற தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதும், சங்க இலக்கியங்கள் பற்றிய தமிழியல் ஆய்வுகள் நடத்தி திருத்திய நூல்களை செம்பதிப்புகளாக வெளியிடல் தொடர்பாக முடிவு செய்தது பற்றியும் புலவர் ஃரான்சிசு முத்துவுடன் 2017-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளாகிய .

(i) To inform Dr. E. Annamalai that his conditions regarding the conduct of the next International Conference ( 10th IATR Conference ) are not acceptable and that

(ii) the conference will be sponsored by IATR in cooperation with FETNA/CTS and will be held in Chicago in July 2018, by setting Organising Committee,

(iii) Facility Committee and Academic Committee and that the Academic Committee will be formed to decide upon the theme of the Conference and to draft the call for papers and to circulate the same among the IATR units and to the International experts who will be identified and invited by the General Secretary (USA) of IATR, Dr. Francis Sevari Muthu, requesting for the submission of abstract of papers from the experts identified.

(iv) The abstract received from the various units will be processed by the Academic Committee and full papers will be invited for the selected abstracts and

(v) That further details regarding the conduct of the Conference will be discussed within a course of time in consultation with FETTN/CTS in Chicago.

ஆகியவை கலந்தாய்வு செய்யப்பட்டன. இந்த இரு கூட்டங்களின் பொருள்கள் பற்றி கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

3.1 முனைவர் அண்ணாமலை 10-வது மாநாட்டினை சிக்காகோ பல்கலைக்கழகத்தில் நடுத்துவதாகப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளை கடத்திவிட்டு இறுதியில்

ஏற்கவியலாத முடிவுகளை எடுத்துள்ள நிலையில், 10-வது மாநாட்டினை சிக்காகோ பல்கலைக்கழகத்தில் முனைவர் அண்ணாமலை துணையோடு நடத்தவேண்டாம் என முடிவு செய்யப்பட்டது.

3.2 மலேசிய நாட்டில் கோலாலம்பூரில் 1987-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் தேதி நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் திருத்தி அமைக்கப்பட்ட உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு தேசியக்கிளையும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கு ஆண்டுக் கட்டணமாக US டாலர் 50/= அல்லது வாழ்நாள் கட்டணமாக US டாலர் 500/= கட்ட நடவடிக்கை எடுக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

3.3 உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திடம் உள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 8-வது மாநாட்டு மலர் விற்பனைத் தொகையாகிய உரு.12.18 இலட்சத்தை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநரிடம் இருந்து பெற தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது,

3.4 சங்க இலக்கியங்கள் பற்றிய தமிழியல் ஆய்வுகள் நடத்தி திருத்திய நூல்களை செம்பதிப்புகளாக வெளியிடல் தொடர்பாக முனைவர் மருதநாயகம் அவர்கள் பொறுப்பேற்பார்கள் என்றும் முதல் முயற்சியாக தொல்காப்பியத்தை செம்பதிப்பாக வெளியிடவேண்டிய பணிகளை மேற்கொள்வார் என்று முடிவு செய்யப்பட்டது.

3.5 பத்தாவது மாநாட்டினை மற்ற நாடுகளில் உள்ள தேசியக்கிளைகளின் உதவியுடன் நடத்த முயற்சி செய்யலாம் என்று தலைவர் கருத்து தெரிவித்தார். அதற்கு துணைத்தலைவர் பொன்னவைக்கோ தென்னாப்பிரிக்க கிளையுடன் தான் பேசியதாகவும் அவர்கள் எற்றுக்கொண்டதாகவும் கூறினார். தென்னாப்பிரிக்காவில் 2018-இல் எந்த மாதத்தில் எந்த பல்கலைக்கழகத்தில் நடத்துவது என்பது பற்றி தென்னாப்பிரிக்க கிளையுடன் கலந்தாய்வு செய்து முடிவு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**4.** தென்னாப்பிரிக்காவில் 10-வது மாநாடு நடத்துவது தொடர்பாக - Organization of the 10th IATR Conference in South Africa.

பத்தாவது மாநாடுட்டினை தென்னாப்பிரிக்காவில் ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்தில்தான் நடத்தவேண்டும் என்ற தலைவரின் கருத்து ஏற்கப்பட்டது. இது தொடர்பாக துணைத்தலைவர் பொன்னவைக்கோ அவர்கள், தென்னாப்பிரிக்கத் தேசியக்கிளைத் தலைவர் முனைவர் மிக்கிச்செட்டி சென்னைக்கு சூலை மாதம் வர இருப்பதாகவும் அப்பொழுது பத்தாவது மாநாடுட்டினை தென்னாப்பிரிக்காவில் எந்த பல்கலைக் கழகத்தில் எப்பொழுது நடத்துவது என்பது பற்றி கலந்துபேசி முடிவெடுப்பதாகக் கூறினார். பொதுச்செயலர் முனைவர் உலகநாயகி பழனி

அவர்கள் நவம்பர் மாதம் தென்னாப்பிரிக்காவில் நடைபெறவுள்ள உலகத்தமிழர் பொருளாதார.மாநாட்டில் கலந்துகொள்ள இருப்பதாகவும் அப்பொழுது முனைவர் மிக்கிச்செட்டி அவர்களை சந்தித்து பத்தாவது மாநாடு நடைபெறத் திட்டமிட்டுள்ள பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டு வருவதாகக்கூறினார்.

5. உறுப்பினர் விவரங்கள் மற்றும் வரவுசெலவு கணக்கு வழங்குதல் - Presentation of Accounts and Membership details;

இதுவரை உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் மற்றும் வரவுசெலவு கணக்கு விவரங்களை துணைத்தலைவர் கீழ்க்காணுமாறு வழங்கினார்;

**உறுப்பினர்கள் விவரம்;**

தனிநபர் உறுப்பினர்கள் - 18

நிறுவன உறுப்பினர்கள் - 4 நிறுவனங்கள் ; ( (i) **உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இந்திய ஒன்றியம், (ii)** உலக சமுதாய சேவா சங்கம்,(iii) பாரதியார் சங்கம் (iv) **தமிழகப் புலவர் குழு )** ( நிறுவனங்களின் மொத்த தனிமனித உறுப்பினர்கள : 27 + 8 + 26 +51 = 112 )

தேசியக்கிளைகள் 6 கிளைகள் ; ( (1) தென்னாப்பிரிக்கா, (2) மரூசியசு, (3) கனடா, (4) மலேசியா (5) லண்டன், (6) சுவிட்சர்லாந்து )
(தேசியக் கிளைகளின் மொத்த தனிமனித உறுப்பினர்கள; 4+12+8+10+8+7 = 49 )

இவற்றுள் உறுப்பாண்மைக் கட்டணம் கட்டாத கிளைகள் ; 4 (1) மரூசியசு, (2) மலேசியா, (3) லண்டன், (4) சுவிட்சர்லாந்து

குறிப்பு ; கட்டணம் கட்டாத தேசியக்கிளை உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது.

**பொதுக்குழு உறுப்பினர்கள்;**

தனிமனித உறுப்பினர்கள் 18 + நிறுவன உறுப்பினர்க7ள் 112 + தேசியக்கிளைகளின் உறுப்பினர்கள் 49 + மையக்குழு உறுப்பினர்கள் 11; மொத்தம் 190 ( இவர்களில் ஓட்டுரிமை பெற்றவர்கள் ; 147 )

**வரவு-செலவு கணக்கு**

**வரவு** ;

| | | |
|---|---|---|
| (1) தனிமனித உறுப்பினர் கட்டணம் | = | உரு .2,11,894.00 |
| (2) நிறுவனக் கட்டணம் ; | = | உரு.1,20,000.00 |
| (3) தேசியக்கிளைக் கட்டணம் ; | = | உரு. 60,000.00 |
| மொத்தம் | | உரு. 3,91,894.00 |

செலவு ;

| | | |
|---|---|---|
| 1. | மன்றப்பதிவு செலவுகள் ...... | உரு .80,000.00 |
| 2. | மூன்று உறுப்பினர்களின் DIN பதிவுக்கட்டணம் | உரு. 12,000.00 |
| 3. | இணையதளம் வடிவமைப்பு செலுவு | உரு. 6034.00 |
| 4. | மன்ற முத்திரைகள் செய்கூலி | உரு. 2000.00 |
| 5. | மன்ற பெயர்ப்பலகை செய்கூலி | உரு. 2700.00 |
| 6. | சிக்காகோ பயணச்செலவு | உரு. 19422.00 |
| 7. | வா.செ.கு. விற்கு புகழ் சான்று மடல் | உரு, 660.00 |
| 8. | வங்கிக் கட்டணம் | உரு. 797.50 |
| | மொத்தச்செலவு | உரு. 1,23,613.50 |
| | வங்கியில் இருப்பு | உரு. 2,68,280.50 |

**6. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இந்தியக்கிளை தொடங்குதல் Formation of the Indian Unit of IATR**

.உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இந்தியக்கிளை இந்தியாவின் பல பகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளுக்கு உட்பட்டு அமைக்கப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இந்தியக்கிளை அமைப்பதின் பொறுப்பை தற்பொழுது இந்தியக் கிளையென அமைத்துள்ள தமிழக உறுப்பினர்கள் ஏற்று செயல்படுவார்கள், இது தொடர்பான ஆணையை தலைவர் வழங்குவார்.

**7. Status of World Tamil Research Association;**

இது பற்றிய விவரங்களை கீழ்க்காணுமாறு துணைத்தலைவர் வழங்கினார்;

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் - WTRA - பற்றிய விவரங்கள்

பதிவு செய்யப்பட்டுள்ள பெயர் : World Tamil Research Association

பதிவு எண் ; U80300TN2016NPL110744.

PAN எண் ; AABCW8291P

உறுப்பினர் விவரம்;

தனிநபர் உறுப்பினர்கள் - 18

நிறுவன உறுப்பினர்கள் - 4 நிறுவனங்கள் ; ( (i) **உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இந்திய ஒன்றியம்,** (ii) உலக சமுதாய சேவா

சங்கம்,(iii) பாரதியார் சங்கம் (iv) **தமிழகப் புலவர் குழு )**
( நிறுவனங்களின் மொத்த தனிமனித
உறுப்பினர்கள : 27 + 8 + 26 +51 = 112 )

தேசியக்கிளைகள் 6 கிளைகள் ; ( (1) தென்னாப்பிரிக்கா, (2) மரூசியசு,
(3) கனடா, (4) மலேசியா (5) லண்டன், (6) சுவிட்சர்லாந்து )
(தேசியக் கிளைகளின் மொத்த தனிமனித உறுப்பினர்கள;
4+12+8+10+8+7 = 49 )

இவற்றுள் உறுப்பாண்மைக்கட்டணம் கட்டாத கிளைகள் ; 4 (1) மரூசியசு,
(2) மலேசியா, (3) லண்டன், (4) சுவிட்சர்லாந்து

குறிப்பு ; கட்டணம் கட்டாத தேசியக்கிளை உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது.

பொதுக்குழு உறுப்பினர்கள்;

தனிமனித உறுப்பினர்கள் 18 + நிறுவன உறுப்பினர்க7ள் 112 + தேசியக்கிளைகளின் உறுப்பினர்கள் 49 + மையக்குழு உறுப்பினர்கள் 11; மொத்தம் 190 ( இவர்களில் ஓட்டுரிமைபெற்றவர்கள் ; 147 )

மையக்குழு உறுப்பினர்கள்;

**PRESIDENT**

Tan Sri Prof.Dr.T. Marimuthu

**VICE-PRESIDENTS**

Dr. M. Ponnavaikko (India), Dr. Jean-Luc Chevillard (France), Dr. Martha Selby (USA)

**SECRETARIES-GENERAL**

Dr.SP.Thinnappan (Singapore), Dr. Francis Muthu (USA), Dr.Ulaganayaki Palani (India), Dr.Krishnan Maniam (Malaysia)

**TREASURER**

R. Muthukumarasamy (India), Tiroumale Chetty (Mauritius)

**CO-ORDINATOR**

Dr.P. Maruda Nayagam (India)

செயற்குழு உறுப்பினர்கள்

Dr.M.Ponnavaikko, Vice-President(India), Dr.Ulaganayaki Palani, Secretary General (India), R. Muthukumarasamy, Treasurer (India), Dr.P. Maruda Nayagam, Coordinator (India)

**8.** பிற பொருள்கள் - Any other matter

8.1 தெரிவு செய்யப்பட்ட உலகத் தமிழ் அறிஞர்களை உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மதிப்புறு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.

8.2 தற்பொழுது IATR செயற்குழு உறுப்பினராக இருக்கும் டாக்டர் மார்த்தா செல்பி அவர்கள் மன்றத்தோடு எவ்விதத்தொடர்பும் இல்லாமல் இருப்பதால் அவரை மையக்குழுவில் இருந்து நீக்கிவிடலாம் என முடிவு செய்யப்பட்டது. அவருக்குப் பதிலாக தென்னாப்பிரிக்காவில் இருந்து ஒருவரை செயற்குழு உறுப்பினராக நியமனம் செய்யலாம் எனவும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

8.3 ஆஸ்திரேலியாவில் இருக்கும் திரு. சுகுமாரன் ஆஸ்திரேலிய தேசியக் கிளை தொடங்க ஏற்பாடு செய்து வருவதாகத் துணைத்தலைவர் தெரிவித்தார். இது தொடர்பாக பேசுகையில் பொதுச்செயலர் முனைவர் உலகநாயகி பழனி அவர்கள் ஆகஸ்டு மாதம் ஆஸ்திரேலியா செல்லவிருப்பதாகவும் அப்பொழுது திரு. சுகுமாரன் அவர்களையும் மற்றும் அவரது நண்பர்களையும் தொடர்புகொண்டு விரைவில் கிளை தொடங்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்.

8.4 தென்னாப்பிரிக்க அரசு தமிழை பள்ளிகளில் இரண்டாவது கல்வி மொழியாக அறிவித்து உள்ளதை இந்தக்கூட்டத்தில் நினைவு கூரப்பட்டது.

8.5 உறுப்பினர்கள் கட்டணம் தொடர்பாக கேட்ட கேள்வி ஒன்றிற்கு துணைத்தலைவர் உ.த. ஆ. மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினர் ஆவதற்கு தனி நபர் ஆண்டுக் கட்டணம் ரூ. 1000/-ம் என்றும் ஆயுள் கட்டணம் ரூ.10,000/- ம் என்றும் , முடிவு செய்யப்பட்டு இணையத்தில் இட்டிருப்பதாகத் தெரிவித்தார்..

8.6 உ.த. ஆ. மன்றத்தின் மதிப்புறு உறுப்பினர்களாகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பதிப்பாசிரியர் முனைவர் பெ.அர்த்தநாரீசுவரன் அவர்களையும், கணினியாளர் திரு. க.செல்லதுரை அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் எனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**9.** நன்றி நவிழ்தல்

உ.த.ஆ. மன்றத்தின் பொதுச் செயலாளர் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினார். இத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது

Signed by

Dr.M.Ponnavaikko

Vice-President ,.